# விலைமனு அழைத்தல்

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# 2023 ஆம் ஆண்டில் சுகாதார காப்புறுதி சேவையை வழங்கல்

**ஒப்பந்த இலக்கம் : UGC/Admin/02/03/IV**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சுகாதார காப்புறுதிச் சேவையை வழங்குவதற்காக தகுதியும் தகைமையும் கொண்டுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து, முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சார்பாக, பெறுகைக்குழுவின் தலைவர் கோருகின்றார்.

02. இதற்கு தேவையான விபரக்குறிப்புக்கள் விலைமனுப்படிவங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

03. உத்தேசிக்கப்பட்டுள்ள சேவைகாலம் 365 நாட்களாகும்.

04. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறையின் பிரகாரம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.

05. இதற்காக தகுதியும் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பொது நிருவாகத்திற்கான சிரேஷ்ட உதவிச் செயலாளரிடமிருந்து 011 2685183 என்ற தொலைபேசி மூலம் பெற்று கொழும்பு - 07, வோட்பிளேஸ், இல.20, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பொது நிருவாகப்பிரிவில் விலைமனுப்படிவங்களை பரிசீலனை செய்யலாம்.

06. 2022.11.23 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

07. வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்) ஐயாயிரம் இலங்கை ரூபாவை (5,000 இலங்கை ரூபாவை) மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதார்களினால் கொழும்பு-07, வோட் பிளேஸ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பொது நிருவாகத்திற்கான சிரேஷ்ட உதவிச் செயலாளரின் அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிறாப்பரிடம் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

08. அனைத்து விலைமனுக்களும் 2023.02.28 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் 2020.10.20 ஆம் திகதியிடப்பட்டதும் 5.3.11 என்ற பெறுகை வழிகாட்டி குறிப்பீட்டிற்கான 36 ஆம் அனுபந்தத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு முகவராண்மையொன்றிலிருந்து பெறப்பட்டதும் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் இலங்கை ரூபாவை மாத்திரம் (125,000 இலங்கை ரூபா மாத்திரம்) மீளளிக்கப்படும் பாதுகாப்பு வைப்பாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிறாப்பரிடம் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

09. இதற்கமைவாக, சுகாதார காப்புறுதி சேவையை வழங்குவதற்கு ஆர்வமுள்ளவர்கள் சுகாதார காப்புறுதி சேவையின் அனைத்து விபரங்களையும் அடக்கியுள்ள விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையில் இரு விலைமனுக்கள் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தயாரிக்கப்பட்டு அவையிரண்டும் தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு தபாலுறைகளில் ''மூலப்பிரதி' மற்றும் 'நகல் பிரதி' என குறிக்கப்பட்டு அவ்விரண்டும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

10. "**Supplying of Health Insurance Service** 2023" என்ற சொற்கள் விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

11. 2022.11.30 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20, வோட் பிளேஸ், கொழும்பு-07 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் மற்றும் இலத்திரனியல் மூலம் அனுப்பப்படும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதென்பதுடன் நிராகரிக்கப்படும்.

12. விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரம் முடிந்தவுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய சபை அறையில் உடனடியாகவே திறக்கப்படுவதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதியானவர் இவ்வேளையில சமுகமளிக்கலாம்.

13. விலைமனுக்களை தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எவ்வித ஆகுசெலவுகள் அல்லது எந்தவொரு செலவினங்களுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,**
**இல. 20, வோட் பிளேஸ்,**
**கொழும்பு-07.**

16.11.2022.